உதவித் தொகை கொடுக்கலாம் அல்லவா? அதன் மூலம் பிச்சை எடுப்பதும் நின்றுவிடும் அல்லவா? ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த யோசனைகளை எல்லாம் அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் இதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. எஸ். பொன்னுசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பென்ஷன் கிடைப்பதற்காக மனுக்கள் கொடுத்து ஆறு மாதங்கள் ஆனாலும்கூட, இதைப்பற்றி விசாரிக்காமல், எந்த விதமான பதிலும் வருவதில்லை. ஆகவே இன்னின்ன காரணத்திற்காக அனுமதிக்கவில்லை என்று பதில் அனுப்புவதற்காகவாவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஏதாவது ஒன்றிரண்டு கேஸ்கள் வேண்டுமானால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறபடி இருக்கலாம். சாதாரணமாக எடுத்துப்பார்த்தால், சுமார் 63 ஆயிரம் பேர்களுக்கு இந்த உதவி செய்து கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் இதில் பெரிய காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல. ஆகவே இந்தக் குற்றச்சாட்டு பொருத்தமாகாது.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, இந்த உதவி கொடுப்பதற்காக வயதை கணக்கிடுவதற்கு வோட்டர்ஸ் லிஸ்டை வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் இந்த லிஸ்டில் வயது தவறாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை மாற்றி அவர்கள் சொல்லுகின்ற பிற ஆதாரங்களை எடுத்துக்கொண்டு விசாரித்து உதவி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவதை ஒத்துக்கொண்டால் நாட்டில் ஒரு பெரிய குழப்பம்தான் ஏற்படும். உண்மையான வயதை என்னென்ன முறையில் கண்டுபிடிக்க முடியுமோ அதை அதிகாரிகள் செய்கிறார்கள். டாக்டர் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். ஜாதகத்தை கொடுக்கிறார்கள். இவைகளை வைத்து எந்தெந்த முறையில் சரியான வயதை நிரூபிக்க முடியுமோ அதைச் செய்யவேண்டும்.

Colony for Ex-Servicemen

* 492 *Q.*—SRI C. M. AMBIKAPATHI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any colony has been constructed for the Ex-servicemen at Jambuvanodai village in Tiruthuraipoondi taluk of Thanjavur district;

(*b*) if so, the year in which it was started; and

(*c*) the number of members to whom lands have been granted and the extent of land so granted?

17th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) A land colonisation co-operative society for the benefit of ex-servicemen was organised in the Jambuvanodai village. The society was registered on 15th August 1952 and started on its work on 20th August 1952.

(c) There are 120 members on the rolls of the society with a paid up share capital of Rs. 30,000 (contributed by members). The extent of lands alienated by Government to the society was 742·65 acres.

திரு. சி. ம. அம்பிகாபதி: மாஜி ராணுவத்தினர்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் கொடுத்த மான்யத் தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய சர்க்காரிலிருந்து லாங்டெர்ம் செய்தது 90 ஆயிரம் ரூபாய். ராஜ்ய சர்க்காரிலிருந்து லாங்டெர்ம் செய்தது 60 ஆயிரம். "போஸ்ட்வார் சர்வீஸஸ் ஃபண்ட்"டிலிருந்து கொடுத்தது 60 ஆயிரம். இதில் அவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து கொடுத்ததில், 61,094 ரூபாயையும், ராஜ்ய சர்க்காரிலிருந்து 60 ஆயிரத்தையும், போஸ்ட்வார் சர்வீஸ் ஃபண்டிலிருந்து கொடுக்கப்பட்ட 60 ஆயிரத்தையும் உபயோகப் படுத்தியிருக்கிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: மத்திய சர்க்காரால் கொடுக்கப் பட்ட தொகை பூராவும் செலவு ஆகாத காரணம் என்ன? விண்ணப்பங்கள் அதிகம் வரவில்லையா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது ஒரு சொஸைட்டிக்கு கொடுக்கப்பட்டது. எவ்வளவு தேவையோ அவ்வளவு அவர்கள் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

Electricity for Agriculture

* 496 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Central Government has urged the State Government to reduce the rates of electricity for agricultural purposes; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) No. communication on the subject has been received by us from the Central Government.